I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES P.W.1
OS.NO.178/2022

**Name** : Mohammed Nizammudin
**Father/Husband Name** : Shah Mohammed Anvarullah

**Age** : 46

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 04.01.2025

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**விசாரணை தொடங்கும் நேரம்: 05.15 p.m.**

**குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களுடன் Ex A .14 உடன் கூடுதல் நிரூபண பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவ்வாறு கூடுதல் நிரூபண பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யாமல் ஆவணம் தாக்கல் செய்வது தவறு என்றால் சரியல்ல. ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளது போல் 1ம் பிரதிவாதி அவரே நேரடியாக அவரது வங்கி கணக்கில் இருந்து என்னுடைய வங்கி கணக்கிற்கு செலுதத்திருக்கிறார் எந்தெந்த தேதியில் என்றால் 27.12.2016 ல் பிரதிவாதி ரூ.20000/- அனுப்பியுள்ளார். 31.12.2016 ல் பிரதிவாதி ரூ.20000/- அனுப்பியுள்ளார். இந்த இரண்டு தொகையை பற்றி நான் வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பிலோ அல்லது வழக்குரையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான், ஆனால் நாங்கள் தொகையை கணக்கீட்டு தான் கூறியுள்ளேன்.

அவ்வாறு தவறுதலாக விடுபட்டு விட்டது என்று கூடுதல் விசாரணையில் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். 2015 ல் நான்

வந்ததில் இருந்து நான் இதுவரை வெளிநாட்டிற்கு செல்லவில்லை. நான் கணக்கில் வரவு வைத்தது தவிர்த்து நேரடியாக பணமாக கொடுக்கப்பட்டு விவரங்கள் குறித்து சொல்லப்படவில்லை என்றால் 2015 முதல் 2018 வரை அவர் பணம் கொடுத்துள்ளார் அவற்றை சேர்த்து தான் நான் சொல்லியுள்ளேன்.

எந்தெந்த தேதியில் என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான் ஏன் என்றால் தேதி தெரியாது ஆனால் பணம் கொடுத்துள்ளது நம்பிக்கையாக ரூ.9,00,000/- வாங்கியிருப்பதாக சொல்லியுருக்கிறேன். தேதி குறிப்பிட்டு வழக்கில் சொல்லப்பட்ட தொகையை தவிர்த்து இந்த ரூ.9,00,000/- யை சொல்கிறேன் என்றால் சரிதான்.

நான் பணமாக கொடுக்கப்பட்டதை சாதகமாக பயன்படுத்தி அவற்றை மறைத்து இந்த வழக்கில் மிகுதி தொகையை கோரி வழக்கில் பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கை தாக்கல் செய்யப்பட்டது காலவரையறையால் பாதிக்கப்பட்டுள்ளது என்றாலும் எனக்கு சேர வேண்டிய பணத்தை அவர் கொடுத்துவிட்டார் என்றாலும் தவறு.

அவர்கள் வியாபாரத்தில் இழப்பு ஏற்பட்டுவிட்டதால் அவர்கள் வியாபாரத்தை மூடிவிட்டார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. நான் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதுபோல் முகமதிய வழக்கத்தின் படி நாங்கள் வட்டி வாங்குவது இல்லை என்பதால் லாபமோ நஷ்டமோ நாங்கள் ரூ.20000/- தருவதாக promissory note படி கூறினார்கள்.

நான் commercial சட்டப்படி தான் வழக்கு தாக்கல்செய்திருக்க வேண்டும் என்றாலும் இந்த சட்டப்படி வழக்கு தாக்கல் செய்ய இயலாது

என்றாலும் தவறு. வட்டி குறித்து ஆவணத்தில் எந்த சரத்தும் இல்லாதபோது வட்டியுடன் கேட்டு இந்த வழக்கு தாக்கல்செய்வது செல்லாது என்றாலும் சரியல்ல pronote ன் படி மாதம் ரூ.20000/– வட்டியாகவோ அல்லது லாபத்தின் படியோ கேட்க உரிமையுள்ளது. அந்த pronote காலவைரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றாலும் அதன் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு சரியல்ல.

1ம் பிரதிவாதி எனக்கு சேர வேண்டிய அசல் தொகையை செலுத்திவிட்டார் என்றாலும் 2ம் பிரதிவாதியின் தூண்டுதலின் படி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தவறான சங்கதிகளுடன் வழக்கு தாக்கல் செய்து முன்னுக்கு பின் நிரூபண வாக்குமூலத்துடன் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**விசாரணை முடிந்த நேரம்:** 5.40 p.m.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

(Sd/G.Santhi)
முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.